S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products AUTHORISED SERVICE PROVIDER
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் நவம்பர் 26 * 2025 * மலர் -1 * இதழ்-178* VOL-1 * ISSUE-178 விலை ரூ.3 * பக்கம் -4

## கோவையில் ரூ.208 கோடியில் அமைக்கப்பட்ட

# செம்மொழிப் பூங்காவை ஸ்டாலின் திறந்து வைத்தார்!










கோவை, நவ.26

கோவையில் ரூ.208 கோடி செலவில் 45 ஏக்கர் பரப்பளவில் அழகிய அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி பூங்காவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். மாலையில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

கோவையில் கடந்த 2010–ம் ஆண்டு நடந்த உலக தமிழ் செம்மொழி மாநாட்டில் அப்போது முதல்அமைச்சராக இருந்த கருணாநிதி கோவை காந்திபுரம் மத்திய சிறை வளாகத்தில் 165 ஏக்கரில் செம்மொழி பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார். 2011–ம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் இந்த திட்டம் செயல்படுத்தப்படவில்லை. 2021–ம் ஆண்டு தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் செம்மொழி பூங்கா திட்டத்துக்கு புத்துயிர் கொடுக்கப்பட்டது.

முதல்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் ரூ.208½ கோடியில் செம்மொழி பூங்கா அமைக்கும் பணியை மாநகராட்சி மேற்கொண்டது. இந்த பணிகளை கடந்த 2023–ம் ஆண்டு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். தற்போது அந்த பணிகள் நிறைவடைந்து உள்ளன.

இதைத்தொடர்ந்து கோவை மக்களின் பொழுது போக்கு தலமாக விளங்க உள்ள செம்மொழிப் பூங்காவை திறந்து வைக்க இன்று காலை 10.05 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலமாக புறப்பட்டு 11.15 மணிக்கு கோவை விமான நிலையம் வந்தார். விமான நிலையத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வரவேற்பு முடிந்ததும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து கார் மூலம் 11.45 மணிக்கு காந்திபுரம் வந்தார். பின்னர் செம்மொழிப் பூங்காவை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். தொடர்ந்து செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டு உள்ள செம்மொழிவனம், மூலிகை தோட்டம், புதிர்தோட்டம், ஆரோக்கிய வனம், நீர்வனம், பாறை வனம், பூஞ்சோலை, மலைக்குன்று உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை அவர் பார்வையிட்டார். பின்னர் அங்கு உள்ள நீர்வீழ்ச்சி அரங்கில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளையும் கண்டுரசித்தார்.

பின்னர் செம்மொழிப் பூங்காவில் உள்ள ஆடிட்டோரியத்தில் பள்ளி மாணவர்கள் மற்றும் கோவையை சேர்ந்த தொழில் அதிபர்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள் என முக்கிய பிரமுகர்கள் 150 பேருடன் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார். இதனை முடித்துவிட்டு அவர், காரில் புறப்பட்டு மதியம் 1 மணிக்கு கோவை அவிநாசி சாலையில் உள்ள தனியார் ஓட்டலுக்கு சென்றார். அங்கு சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார்.

இதைத்தொடர்ந்து மாலை 5 மணியளவில் அங்கு தமிழ்நாடு தொழில் துறை சார்பில் டி.என். ரைசிங் என்ற நிகழ்ச்சி நடக்கிறது. இதில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். அப்போது அவரது முன்னிலையில் பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட உள்ளது.

இன்றைய கூட்டத்தில் பல நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. குறிப்பாக வி.ஏ.எப். ஏரோ சிஸ்டம், சக்தி ஏர் கிராப் இன்டஸ்ட்ரி, போவியா டெக் உள்ளிட்ட பல விமான தொழில் நுட்ப நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இதை தவிர எஸ்.டி.டி. குளோபல் டேடா என்டர்ஸ் என்ற நிறுவனம் ரூ. 4,200 கோடியை முதலீடு செய்ய இருப்பதாக கூறப்படுகிறது. இதன் மூலம் 1,800 பேருக்கு வேலை கிடைக்கும். மேலும் சிங்கபூரை சேர்ந்த கேளிபர் என்ற நிறுவனம் ரூ.3 ஆயிரம் கோடிக்கு முதலீடு செய்ய உள்ளது.

பின்னர் கோவையில் இருந்து கார் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்திற்கு செல்கிறார். நாளை அங்கு அரசு விழாவில் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். மேலும் சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை மற்றும் அவரது படைத்தளபதி மாவீரன் பொல்லான் ஆகியோரின் சிலைகளுக்கும் மரியாதை செய்கிறார். முதல்அமைச்சர் கோவை வருகையை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் 1,500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



காரியாபட்டி அருகே உள்ள பி.புதுப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் மரக்கன்றுகள் நடும் பணியினை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 51 புதிய பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த. பிரபுசங்கர், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



பாபநாசம் மலையில் உள்ள அகஸ்தியர் அருவி தெரியாத அளவிற்கு வெள்ளநீர் கரைபுரண்டு ஓடுவதை படத்தில் காணலாம்.



தூத்துக்குடிகோரம்பள்ளம்அணையில்இருந்து உப்பாற்றில்திறந்துவிடப்பட்டதண்ணீர் ஊருக்குள் சென்று விடக்கூடாது என்பதற்காக கரைகள் பலப்படுத்தப்படுவதை படத்தில் காணலாம்.







வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த. பிரபுசங்கர், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.